DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No. 46/2025 |
| Deposition of witness | : | P. W – 1 |
| Name | : | ரெங்கராஜன் |
| Father's /Husband Name | : | வெங்கடேசன் |
| Village | : | புலிவலம் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 47 |
| Occupation | : | அர்ச்சகர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 06th day August 2025.
A1 present. A2 produced from Judicial Custody.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது முடிகொண்டான் பிரச்சன்ன வெங்கடாஜலபதி கோவிலில் அர்ச்சகராக பணிபுரிந்து வருகிறேன். தினமும் காலை 08.00 மணிக்கு கோவில் திறந்து நான் பூஜை முடித்து இரவு 08.00 மணிக்கு கோவில் கதவினை பூட்டிவிடுவேன். எனக்கு உதவியாக முடிகொண்டான் பாலகிருஷ்ணன் மகன் சுதாகர் என்பவரும் உடன் இருப்பார். கடந்த 24.11.2024–ம் தேதியன்று வழக்கம் போல் பூஜை முடித்து இரவு 08.00 மணிக்கு கோவில் கதவுகளை பூட்டிவிட்டு எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் கோவில் சாவியை நடு அக்ரஹாரத்தில் வசித்து வரும் மாலதி சீனிவாசன் என்பவரிடம் சாவியை கொடுக்கசொல்லி சுதாகரிடம் கொடுத்து அனுப்பி வைத்தேன். மறுநாள் காலை நான் கோவிலுக்கு வரவில்லை. 26.11.2024–ம் தேதி வேறு ஒரு அர்ச்சகர் கோவிலுக்கு பூஜை செய்தார். 27.11.2024–ம் தேதி காலை சுதாகர் கோவிலுக்கு வந்து பார்த்தபோது கோவிலுக்குள் உள்ள உள் கதவு பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருந்ததாக போன் மூலம் தகவல் சொன்னார். நான் அன்று காலை 11.00 மணிக்கு கோவிலுக்கு சென்று பார்த்தபோது திருட்டு போய் இருந்தது. கோவிலில் இருந்த வெள்ளி கிரீடம், உச்சவருடைய வெள்ளி கிரீடம், வெள்ளி கவசம், வெள்ளி பாண்டியன் கொண்டை, வெள்ளை வைர முடி, ஸ்ரீதேவி பூமிதேவி தயாருடைய திருமாங்கல்யங்கள் பவுன் தலா 2 கிராம் எடைகொண்டது, திருமஞ்சன வெள்ளி கிரீடம் ஆகியவை திருடப்பட்டிருந்தது. அருகில் உள்ள காசி விஸ்வநாதர் திருக்கோவிலில் அம்மாள் கழுத்தில் இருந்த திருமாங்கல்யம் பவுன் 2 கிராம் மற்றும் துர்கையம்மன் கழுத்தில் இருந்த பவுன் பொட்டு தாலி 2 கிராம் எடை கொண்ட நகைகள் திருடப்பட்டது. இது தொடர்பாக நன்னிலம் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டது

சஜாத் அலி, கார்த்திகேயன் என்ற எதிரிகள் என்று தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள இரண்டு கோவிலுக்கும் அர்ச்சகர் என்றால் இல்லை ஒரு கோவிலுக்கு மட்டும் அர்ச்சகர். நான் எத்தனை மணிக்கு சுதாகர் என்பவருக்கு போன் செய்தேன் என்றால் காலை 08.00 மணிக்கு போன் செய்தேன். கோவில் சாவி யாரிடம் அளித்து சென்றேன் என்றால் மாலதி சீனிவாசன் என்பவரிடம் அளித்து சென்றேன். எனக்கு உடல்நிலை சரியில்லாதபோது அவரிடம் தான் சாவியை அளித்து செல்வேன். அவரிடம் தான் சாவியை அளிக்க வேண்டும் என்று உத்தரவு எதுவும் உள்ளது என்றால் இல்லை. காணாமல் போன நகைகள் பற்றிய விபரங்கள் பதிவேட்டில் பதிவு உள்ளதா என்றால் உள்ளது. சம்பவத்து அன்றே புகார் அளித்தேன் என்றால் சரிதான். 27–ம் தேதி புகார் அளித்தேன். புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலிசார் எழுதினார்கள். புகார் எத்தனை பக்கம் கொண்டது என்றால் மூன்று பக்கம் கொண்டது. காணாமல் போன நகை விபரங்களை புகாரில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். காணாமல் போன நகைகளை போலிசார் காண்பித்தார்களா என்றால் இல்லை. எதிரியை பற்றி போலிசார் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். கோவிலானது தனியார் கோவிலா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும்நடைபெறவில்லை என்றாலும், நான் பொய் புகார் அளித்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், எதிரிகளுக்கும்இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றாலும் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.20 19:24:25 +0530